விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 8 ரம்மா 21 இதழ் 128

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-6-84

## "உப ஜனாதிபதி பதவியில் தமிழர் இருப்பதையேவிரும்புவேன்!"

### றீகனிடம் ஜே. ஆர். கருத்து

### அடுத்த பிரதம நீதியரசர் ஒரு தமிழராம்!

வாஷிங்டன், ஜூன் 21,

"எனக்கு உபஜனாதிபதி ஒருவர் இல்லை. ஆனால் அப்பதவியை ஏற்படுத்த வேண்டியிருந்தால் தமிழர்ஒருவரையே உபஜனாதிபதியாக்குவேன்" என்று இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்க ஜனாதிபதி றீகனிடம் தெரிவித்தார்.

இவ்விரு தலைவர்களும் வெள்ளை மாளிகையில் உரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இலங்கையில் தமிழர்கள் வகிக்கும் உயர் பதவிகளையும் திரு. றீகனிடம் பட்டியலிட்டுக் கூறினார்.

சட்டமா அதிபர் பொலிஸ் மாஅதிபர் ஆகிய பதவிகளைத் தமிழர்களே வகிக்கின்றனர் என்று கூறிய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராகத் தமிழர் ஒருவரே நிய

(8ம் பக்கம் பார்க்க)

# "பயங்கரவாதிகளுக்கு தமிழக அரசு உதவுகிறது!"

## வாஷிங்டனில் ஜனாதிபதி

(வாஷிங்டன்)

"இந்தியாவில் நான் மேற்கொள்ளவுள்ள விஜயத்தின்போது இலங்கைப் பயங்கரவாதிகளை உற்சாகப்படுத்த வேண்டாமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் கேட்டுக்கொள்வேன்" என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களினால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்: "பயங்கரவாதிகளுக்கும் கடத்தல்காரர்களுக்கும் தமிழ்நாடு அரசு உதவிவருகிறது என்றும் பயங்

(8-ம் பக்கம் பார்க்க)

## பேராதனை விவகாரம்

(கொழும்பு)

பேராதனையில் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபத்தில் இம்மாதம் 23ம் திகதி நடைபெறவிருந்த களனிப்பல்கலைக் கழக பட்டமளிப்புவிழா ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [வெ]

## "பயங்கரவாத நடவடிக்கை வடக்கு, கிழக்கில் ஓயவில்லை!"

### பாராளுமன்றத்தில் அமைச்சர் வின்செண்ட்

(கொழும்பு)

"நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருவதால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டியுள்ளது" என்று பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு வின்செண்ட் பெரேரா நேற்றுப் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைமீது உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் பயங்கரவாத நடவடிக்கைகள் ஓயவில்லை. அமைதியை

(8ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரசபை பாடசாலைகள் இன்று மூடப்படும்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபைப் பகுதியிலுள்ள சகல பாடசாலைகளும் இன்று மூடப்படுமென்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் மூடப்பட்டாலும், ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமுகமளிக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் அனைத்தும் திங்கட்கிழமை வழமைபோல் இயங்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

தங்காலை மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளும் இன்று மூடப்படுமென்று அம் மாவட்ட கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வெ)

★ பஸ் எரிக்கப்பட்டது ★ ஒருவர் பலியானார் ★ பொலிஸார் காயமடைந்தனர்

# கொழும்பில் நேற்று நடந்த அசம்பாவிதங்கள்! 15 பேர் கைது!!

(கொழும்பு)

கொழும்பில்நேற்று அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாக ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு ஹவ்லொக் பகுதியில் தீவிரவாதிகள் குழுவொன்று பஸ்களுக்கு கற்களை வீசியது என்றும், மத்திய போக்குவரத்து சபை பஸ் ஒன்றுக்குப் பல்கலைக்கழக மாணவர்களினால் தீவைக்கப்பட்டதாகவும் ராஜாங்க அமைச்சு தெரிவித்தது.

இச்சம்பவங்களின்போது ஒருவர் பலியானதாகவும், ஒருவர் காயமடைந்ததாகவும் பொலிசாரும் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

பாடசாலைகளிலுள்ள மேல் வகுப்பு மாணவர்களையும் குழப்பத்தில் ஈடுபடுத்த தீவிரவாதிகள் குழுமுயற்சியெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம்முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாம்.

இக்குழப்பங்கள் குறித்து மக்களை விழிப்பாக இருக்கும்படி அரசாங்கம் கேட்டுள்ளது.

இதுதொடர்பாகப் 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்புத்தருமாறு பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (வெ)

## கடத்தல்காரர்களின் குண்டுவீச்சு: 20 பேர் பலி!

சென்னை, ஜூன் 21

தமிழ்நாட்டில் கடத்தல் படகொன்றை துரத்திச் சென்ற சுங்க அதிகாரிகள் மீது கடத்தல்காரர்கள் நாட்டுக் குண்டுகளை வீசியபோது இருபது பேர் பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

சுங்க அதிகாரிகள் இதுதொடர்பாக 3 கடத்தல் காரர்களைக் கைதுசெய்துள்ளனர். (வெ)

## "ஜனாதிபதியின் விஜயம் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும்"

(கொழும்பு)

"இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை ஏற்படுத்தியது பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கும், அரபு நாடுகளுக்கும் எதிரானதல்ல"

இவ்வாறு கம்பஹா எம். பி. திரு. எஸ். டி பண்டாரநாயக்கா நேற்றுப்பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

'ஜனாதிபதியின் அமெரிக்க, இந்தியா விஜயம் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும்' என்றும் அவர் கூறினார். (வெ)

### இலங்கை ஜனாதிபதி அமெரிக்க விஜயம்:

# வாஷிங்டனில் ஆர்ப்பாட்டம்; பத்திரிகையில் எதிர்ப்பு அநுபந்தம்

(வாஷிங்டன்)

சுமார் நூறுக்கும் அதிகமான வாஷிங்டனில் வாழும் இலங்கைத் தமிழர்கள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அமெரிக்கவிஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

இந்தஆர்ப்பாட்டம் வெள்ளை மாளிகையில் இலங்கை ஜனாதிபதிக்கு வரவேற்பு நடந்து கொண்டிருந்த போது 'பொயெட்' என்ற மைதானத்தில் ஒரு மணித்தியாலம்வரை இடம்பெற்றதாக செய்திகள் தெரிவித்தன.

வாஷிங்டனில் உள்ள 'ஈழத் தமிழர்கள்' என்ற இயக்கமே இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குசெய்திருந்தது.

(8ம் பக்கம் பார்க்க)

## நகரில் ஏற்பட்ட பரபரப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். லிடோ தியேட்டருக்கு எதிரில் மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் நேற்றுக்காலை ஏற்படுத்திய பரபரப்பினால் யாழ். நகர் அல்லோலகல்லோலப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நகரில் கடைகள் யாவும் அவசரமவசரமாகப் பூட்டப்பட்டன!

மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள். மினிபஸ் சேவைகள் வழக்கம்போல நடைபெறவில்லை. இ. போ. ச. பஸ்களில் பிரயாணிகள் குறைவாக இருந்தனர். நேற்றுப்பகல்முழுவதும் வீதிகளில் சனநடமாட்டம் இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மயிலிட்டி V. C. ரோட்டில் கிராம சபைக்கு அருகில் 20 பரப்புக் காணியும், கைதடி கண்டி ரோட்டில் வீடு கட்டுவதற்கு உகந்த காணி 20பரப்பும் (மின்சார வசதியுடன்), தொழிற்சாலைக்கு உகந்த காணி 40 பரப்பும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. திருநாவுக்கரசு, 415, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 395

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சகல தளபாட வசதிகளுடன் தற்போது இயங்கிவருகின்ற தனியார் கல்வி நிறுவனம் ஒன்று விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: C/o ஈழநாடு, விளம்பர இல: 396, யாழ்ப்பாணம். 396

இசுசூ ரோசா (6 சிலிண்டர்) மினிபஸ் பிரைன்ஸ் வசதியுடன் உடன் விற்பனைக்கு உள்ளது. அ. அன்ரன், நித்திய கல்யாணி ஜுவல்லறி, 162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 397

கோப்பாய்வடக்கில் பருத்தித்துறை (பிரதானவீதிக்கு சற்று உள்ளே சந்திக்கருகில்) நாவற்கட்டையில் கிணற்றுடன் ஆறுபரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. நா. செல்லத்துரை, நியூஸ்ஏஜண்ட், கோப்பாய் வடக்கு, கோப்பாய். 372

ரெம்பிள் ரோட்டில் றக்கா ரோட் சந்திக்கும் றெயில்வேக் கடவைக்கும் இடையில் ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கிழமையில் எல்லா நாட்களிலும் 107, ரெம்பிள் ரோட் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளலாம். 413

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் ஒரு அறை இணைப்புக் குளியலறையுடன் பெண்மணி ஒருவருக்கு (Journalist) உடன் தேவை. தொடர்பு: C/o எஸ். இராஜலட்சுமி, வாலை அம்மன் கோவிலடி இராமலிங்கம் ரோட் திருநெல்வேலி, கிழக்கு, யாழ்ப்பாணம். 404

## சேவை

குறைந்த செலவில் கார் சாரதியாகி லைசென்ஸ் பெற விரும்புவோர் கீழ் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்: ஆ. இரத்தினசபாபதி, காளிகோவிலடி, தாவடி வடக்கு, கொக்குவில். 386

## வகுப்புக்கள்

ரெலிவிசன், வீடியோ-டெக் றிப்பியறிங், வயறிங், வெல்டிங், ஏயர்கொண்டிசனிங் இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியுட்பட பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 23-06-84 Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். 393

Pharmacy Classes (External) Beginers/Revision. Dr. Gnanapandithan அவர்களால் 23-6-84 காலை 7-30 சனிக்கிழமை தொடக்கம் நடைபெறும். சு. பாலசுப்பிரமணியம், யாழ். கல்வி நிலைய கட்டிடம் (மேல் மாடி) (சாந்தி தியேட்டர் அருகே), யாழ்ப்பாணம். 391

**கலர் பிலிம் இனும்!**
**விபரங்கள் நேரில்**
**கொழும்பு ஸ்ருடியோ**
யாழ்ப்பாணம்

## முதலிலே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்
தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் சாந்தராசா என்பவரின் மரணசாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்கம்
இல. 201

நாகலிங்கம் சாந்தராசா கைம்பெண் பங்கயதேவி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட வழக்குமேலே பெயர் குறிப்பிட்டப்பட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1984ம் ஆண்டு வைகாசி மாதம் ஏழாந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றானகட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக்கட்டளைப்படி,

**ஆழ்வார்**
**சிவபாதசுந்தரம்,**
பதிவாளர்,

1984ம் ஆண்டு வைகாசி மாதம் 7ஆந்நாளன்று தேதியிடப்பட்டது.

என்னால் வரையப்பட்டது.
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
359

## கொக்குவிலில் வீடு கடைஉடன் விற்பனைக்கு

கொக்குவில் - காங்கேசன்துறை வீதியில் இந்துக் கல்லூரிக்கு மிகவும் அண்மையில்பிரசித்தமான சந்தியில் இரு அறைகளைக் கொண்ட வீடும் காணியும் உடன் விற்பனைக்குண்டுஒருபகுதி கடையாகவும் பாவிக்க உகந்தது. தொடர்பு கொள்க: சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாலன் ஜே. பி. யு. எம்., கண்டிவீதி, சாவகச்சேரி, தொலைபேசி 262 சாவகச்சேரி. 366

## பிறந்த நாள் வாழ்த்து



மகேந்திரராஜா சுஜீவன்

மகேந்திரராஜா மல்லிகா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன்

**"சுஜீவன்"**

22-06-1984 வெள்ளிக்கிழமை (இன்று) முதலாவது பிறந்த நாளை **சேர்லேன் கொக்குவில் மேற்கிலுள்ள** தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவர் சீரும் சிறப்புடன் பல்கலை கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துவோர் அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அன்ரிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள். 419

## கிறீன் பீல்ட் ரவல் ஒப்பறேற்றர்ஸ்
### 26, நவீன சந்தை, [மேல்மாடி] யாழ்ப்பாணம்.

[மேல்மாடி மக்கள் வங்கிக்கு எதிராக]

## சர்வதேச/உள்ளூர் ரெலெக்ஸ் சேவையும் தொலைபேசித் தொடர்பும்

1. நொடிப் பொழுதில் உங்கள் அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ உள்ள தொலைபேசியில் இருந்துகொண்டே சர்வதேச / உள்ளூர் தொடர்புகளை உடன் ஏற்படுத்திக்கொள்ள எம்மை அழையுங்கள்.
2. எமது நிறுவனத்தில் இருந்தவாறே உங்கள் அழைப்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் உங்களுக்கு உண்டு.
3. துரித தொலைத் தொடர்புகளுக்கும், நல்லுபசாரத்திற்கும் உறுதி அளிக்கும் எம்மை உங்கள் வருகை உற்சாகமூட்டுவதாகும்.
4. ஏற்றுமதியாளர்களுக்கும், இறக்குமதியாளர்களுக்கும், வியாபாரத் தொடர்புகளுக்கும் எங்கள் ரெலெக்ஸ் நம்பரை வெளிநாடுகளுக்கோ, உள்நாடுகளுக்கோ, தங்கள் கடித முகப்புகளில் [Letter pad] குறித்து, ரெலெக்ஸ் செய்திகளை அனுப்பவும் மீளப்பெறவும் [illegible]

TELEPHONE No:- 22784, 23875. TELEX No:- [illegible]

வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள்

## B. A. துரித மீட்டல்

## ஆரம்பம் — 23-6-1984 டிசம்பர்

# THE LAW CENTRE

B. M. C. LANE, JAFFNA, 423

ஓம் முருகா

## மாத்தனை கந்தசாமி கோவில் கொக்குவில்

# ம ஹோ ற் ச வ ம்

24-6-84 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றம்

4-7-84 — தேர்த்திருவிழா
5-7-84 — தீர்த்தோற்சவம்
7-7-84 — திருக்கல்யாணக் காட்சியுடன் திருவிழா நிறைவேறும்

**முருகபக்தர்கள் அனைவரும் வருக**

417 கோவில் பரிபாலன சபையினர்.

## ந ன் றி ந வி ல ல்



திரு. க, இரத்தினகோபால் தம்பதிகளின் புதல்வரும், ''மில்க்வைற் தொழிலக'' உரிமையாளர் க. கனகராசா ச. நீ. தம்பதிகளின் பெருமகனுமாகிய

**இ. நந்தகோபாலுக்கும்**

சாந்தி அச்சக உரிமையாளர் திரு. தி. நாகரத்தினம் தம்பதிகளின் புதல்வி

**சந்திராதேவிக்கும்**

10-6-84 அன்று நடைபெற்ற திருமணம் சார்பாக மணமக்களை ஆசீர்வதித்து வாழ்த்திய

**அனைவருக்கும் எமது நன்றிகள்.**

**மில்க்வைற், சாந்தி அச்சகம்.**

(414)

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்
### கிளிநொச்சி

எமது சங்கத்தின் இருப்பில் உள்ள பின்வரும் சாக்குகள் கேள்வி விண்ணப்பங்கள் மூலம் எம்மால் விற்பனை செய்யப்படவுள்ளன. விரும்புவோர்கள் ரூபா 10/-ஐ செலுத்தி எமது சங்கத்தில் பெறப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தில் ரூபா 250/- மீளப் பெறும் வைப்பாகச் செலுத்திய பற்றுச் சீட்டு இலக்கத்தையும் குறிப்பிட்டு 26-6-84 நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக கடித இடது மேல் மூலையில், 'வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிட்டு ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ, கூ. சங்கம் கிளிநொச்சி'' என்னும் முகவரிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். சாக்குகளை பார்வையிட விரும்புவோர் சங்கத்தின் எந்த ஒரு வேலை நாட்களிலும் பார்வையிடலாம். விண்ணப்பத்தாரிகள் முன்பாகவே கேள்வி மனுக்கள் உடைக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு உடன் அறிவிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் 29-6-84 க்கு முன்பாக முழுப் பணத்தையும் செலுத்தி, வெற்றுச் சாக்குகளை அப்புறப்படுத்தி விடவேண்டும்.

### வெற்றுச் சாக்குகள் விபரம்

| | | |
|---|---|---|
| 01 அந்தர் சீனிச் சாக்கு | — | 1600 |
| 02 புசல் அரிசிச் சாக்கு | — | 12780 |
| 02, ½ புசல் அரிசிச் சாக்கு | — | 5176 |
| 03 புசல் சாக்கு | — | 69 |
| மா பிறிமா சாக்கு | — | 6500 |
| மா 02 புசல் கண்ணறை | — | 440 |
| சாக்கு சீனி 3 புசல் | — | 1120 |
| நைலோன் பைகள் 1 அந், ½ அந் உட்பட | — | 650 |
| நவதானியம் | — | 500 |
| கழிவு | — | 600 |
| மொத்தம் | — | 29435 |

19-6-84 பொதுமுகாமையாளர்
407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரோன் சோவியத் யூனியன் பயணம்

## சோவியத் அதிபர் சேர் நென்கோவை சந்திக்கும் முதல் 'நேட்டோ' தலைவர்

மாஸ்க்கோ ஜூன் 29

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஸோ மித்தரோன் 3 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றிரவு சோவியத் யூனியன் வந்தடைந்தார். இவரை சோவியத் ஜனாதிபதி திரு. கொன்ஸ்ரான்ரின் சேர்நென்கோ மற்றும் ஏனைய சோவியத் பிரமுகர்கள் மாஸ்க்கோவில் வரவேற்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் சோவியத் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு, சேர்நென்கோவைச் சந்திக்கும் முதலாவது 'நேட்டோ' நாடொன்றின் தலைவர் திரு. மித்தரோன் ஆவார். அத்துடன் கடந்த ஐந்து வருடங்களில் சோவியத் அதிபரைச் சந்திக்கும் முதலாவதுபிரான்ஸ் அதிபரும் இவரென்றே தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸ் அதிபர்திரு. மித்தரோன், சோவியத் அதிபர் சேர்நென் கோவுடன் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். இப்பேச்சுக்களின் போது இவ்விரு தலைவர்களும் 'நேட்டோ' 'வார்ஸோ' நாடுகளின் புதிய கருத்துக்கள் கொள்கைகள் என்பன பற்றி ஆராய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'நேட்டோ' நாடுகளுடன் சோவியத்யூனியன் பலத்த கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பிரான்ஸ் அதிபரின் இவ்விஜயம் மிக முக்கியமானதொன்றெனக் கருதப்படுகின்றது. அத்துடன் இவ்விஜயம் ராஜதந்திர உறவுகளுக்கு ஒரு வெற்றியெனவும் குறிப்பிடப்பட்டது.

இது இவ்வாறிக்க அமெரிக்க அதிபர் திரு. றொனல்ட் றீகனையும், சோவியத் அதிபரைச் சந்திக்கும் படியும் சோவியத் யூனியனுடன் அணு ஆயுதக் குறைப்புப் பற்றி பேச்சுக்கள் நடத்தும்படியும் அமெரிக்க செனட்சபை கேட்டு வருகின்றது. (கி)

## நோர்வேயில் சீக்கிய இந்திய தூதரக அதிகாரி ராஜினமா!

ஒஸ்லோ, ஜூன் 21

நோர்வே இந்தியத் தூதரக பொறுப்பதிகாரி ஹரேந்திர சிங் பதவி விலக்கப்பட்டுள்ளார் என்று இந்திய வெளிநாட்டமைச்சு நேற்று அறிவித்தது.

திரு. ஹரேந்திர சிங் ஒரு சீக்கியராவார். இவர் பஞ்சாப் 'பொற்கோயில்' வளாகத்தினுள் இந்தியத் துருப்புக்கள் பிரவேசித்ததைக் கண்டித்து தமது பதவியிலிருந்து இரு தினங்களுக்கு முன்னர் ராஜினமாச்செய்தார். அத்துடன் தமக்கு 'நோர்வே'யிலேயே அரசியல் புகலிடம் தரும்படியும் அவர் நோர்வே அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்.

''இந்திராகாந்தி பதவி ஆசை கொண்டவர். சீக்கியர் தமது கோரிக்கைகளிலிருந்து

(7-ம் பக்கம் பார்க்க)

## உலக சனத்தொகை அடுத்த நூற்றண்டில் 1100 கோடி!

### முன்னுள் உலக வங்கித் தலைவர் எச்சரிக்கை!

வாஷிங்டன், ஜூன் 21

''சனத்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படாவிடில் இந்தநூற்றுண்டு இறுதியில் உலகமொத்த சனத்தொகை 1100கோடிகளாக இருக்கும்''.

இவ்வாறு முன்னுள் உலக வங்கித் தலைவர் ரொபேர்ட் மக்னமாரா எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் 'வெளிநாட்டு சஞ்சிகை' என்ற சஞ்சிகைக்கு எழுதியுள்ள கட்டுரையிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

மூன்றும் உலக நாடுகளே சனத்தொகைப் பெருக்கத்தில் கூடுதல் கவனமெடுக்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய உலக சனத்தொகை 470கோடி என்றும், சனத்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் 2000ம் ஆவது நூற்றுண்டில் உலக சனத்தொகை 1100 கோடியாக அதிகரித்துவிடும் என்றும் மக்னமாரா எழுதியுள்ளார்.

பம்பாய், டாக்கா, ஷங்காய், மெல்போர்ன் ஆகிய நகரங்களில் சனத்தொகைப்பெருக்கம் கட்டின்றிக்கூடுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (கி)

## நோர்வே மீன்பிடி வலையில் சோவியத் நீர்மூழ்கி!

ஒஸ்லோ ஜூன் 21

நோர்வேயின் மீன்பிடிகப்பலொன்றின் பாரிய வலையில் சோவியத்தின் நீர்மூழ்கிக்கப்பலொன்று சிக்கிக்கொண்டது.

சர்வதேச கடலில் நோர்வேக்கு தென்பகுதியிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. சுமார் மூன்று மணித்தியாலயங்கள் வரை இந்த நீர்மூழ்கிக்கப்பல் 'பென்ரின்' என்ற அந்த நோர்வே மீன்பிடிக்கப்பலின் வலையில் சிக்கிச்சிரமப்பட்டது.

நீர்மூழ்கி சிக்கியதையடுத்து அம் மீன்பிடிக்கப்பல் கரைக்குத் தகவல் கொடுத்தது ஆனல் பாதுகாப்புப் படகுகள் அங்கு அதற்கு விரைய முன்னர் அந்த நீர்மூழ்கி தன்னை விடுவித்துக்கொண்டு சென்று விட்டது.

கடந்த ஆண்டு சோவியத் நீர்மூழ்கிகள், நோர்வே, சுவீடன் கடல்பகுதிகளில் நடமாடுவது குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நாடுகளில் உளவு வேலைகளுக்காகவே சோவித் நீர்மூழ்கிகள் திரிகின்றன என்றும் கூறப்பட்டது,

சுவீடன், நோர்வே ஆகிய நாடுகள் கடந்த ஆண்டு சோவியத் நீர்மூழ்கிகளை மடக்கிப்பிடிப்பதிலும் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## அச்சுவேலி காட்டுமலை ஆலய உற்சவம்

(அச்சுவேலி)

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 2-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது, வரும் 26-ம் திகதி கார்த்திகை உற்சவமும், 27-ம் திகதி தேரும் 28-ம் திகதி தீர்த்தோற்சவமும், 29-ம் திகதி பூங்காவனமும் நடக்கவுள்ளது.

## சாந்திக மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் சாந்திக மகோற்சவம் கடந்த 17 ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இம்மாதம் 28 ம் திகதி பகல் சங்காபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை பிரதம குரு பரமேஸ்வரக் குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள் செய்துள்ளனர்,

### போர்நிறுத்தம் மீறல்:

## ஈரான் ஈராக் மீண்டும் மோதுகின்றன!

### குடிமக்கள் வாழும் பகுதிகளில் தாக்குதல்கள்!

ஐ. நா, ஜூன் 21

ஐ. நா. பாதுகாப்புச்சபை கொண்டுவந்த போர் நிறுத்தத்தையும் மீறி ஈரான்-ஈராக் ஆகியன மீண்டும் போரிடத் தொடங்கியுள்ளன.


இவ்விரு நாடுகளும் போர் நிறுத்தம் மீறப்பட்டமை குறித்து ஒன்றையொன்று குற்றஞ் சாட்டியுள்ளன.

ஈராக்கின் தென்பகுதி நகரான பத்ராவில் நேற்றுக் காலை 10-40 முதல் 11 மணி வரை ஈரான் தாக்குதலைநடத்தியது என்றும் தாக்குண்ட பிரதேசம் குடிமக்கள் வாழும் இடங்கள் என்றும் ஈராக்தெரிவித்துள்ளது.

இதேவேளை ஈரானும் ஈராக்கை குற்றஞ்சாட்டியுள்ளது. ஈரான் எல்லைப்பகுதி நகரான அபடான் பகுதியில் ஈராக் குண்டுவீச்சு நடத்தியதாகவும், இதனல் இருகுழந்தைகள் உட்பட பலர்கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புக்கமிட்டி ஈரான்-ஈராக் ஆகியனவற்றை குடிமக்கள் வாழும் பகுதிகளில் தாக்குதல் நடத்தவேண்டாம் எனக்கேட்டுள்ளது. (கி)

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து அதிக விளைச்சலைப் பெறுங்கள்
BASF
குமுலுஸ் எஸ்
நீரில் கரையக் கூடிய 80% கெந்தகம்
• நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
• மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
• மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது
இது ஒரு ''மேற்கு ஜெர்மனி 'BASF'' தயாரிப்பாகும்.
குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50
கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்
மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2, ஞானர்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல.9 (முன்னுள்மருதானைறேட்) கொழும்பு-8.
தொலைபேசி: 5979659




பெல்ஜியம் கனடா இத்தாலி
பிரான்ஸ் ஜேர்மனி
போன்றசகலநாடுகளுக்கும் செல்ல விரும்புகிறீர்களா?
டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99 2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு 1. போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நாவை அடக்கியவன் நன்கு விவாதிப்பவனை விடமேலானவன். மனதை அடக்கியபவன் ராஜாதி ராஜனை விட அதிகம் ஆற்றல் வாய்க்கப்பெற்றவன் தன்னை வென்றவன் தேவர்களுக்கும் மிக்கான் ஆகிறான்.

— அருள் விருந்து

## நமது நோக்கு

# வினை, தினை, வெங்காயம்

'எனைப்பகை உற்றுரும் உய்வர் வினைப்பகை வீயாது பின் சென்று அடும்'

என்பது பொய்யாமொழி.

இந்நாட்டில் வாழும் பெரும்பகுதி மக்களாகிய பௌத்தரும், இந்துக்களும் கர்மவிதியைப் பொதுக் கொள்கையாகக் கொண்டவர்கள்.

வள்ளுவர் இதனை எதிர் மறையாக சொல்கின்றார். எந்தச் சத்துருவைச்சம்பாதித்துக் கொண்டாலும் அந்த விரோதத்தினால் உண்டாகும் துன்பத்தினின்று தப்பலாம். ஆனால்நாம்செய்யும்செயலே நமக்குச்சத்துருவாகிப் பின் தொடரும் அந்தப்பகையின் தண்டனையிலிருந்து தப்புதல் முடியாது.

வினை விதைப்பவன் வினை அறுக்கிறான். தினை விதைப்பவன் தினை அறுக்கிறான் என்றும் நாம் இதனை விளக்கிக் கொள்வது வழக்கம்.

எங்கள் நாட்டின் வெங்காயம் தினையை விட்டு வினையைநாடுவதால்வருடா வருடம்வெங்காயப் பஞ்சம் ஏற்படுகிறது.

வெங்காயம் வினையுடன் சேர்வதென்றால் என்ன அர்த்தம்?

1956ல் டாக்டர் என். எம். பெரேரா தலைமையில் ல. ச. சமாஜகட்சி ஆட்சி யேறுவதாக யாழ்ப்பாணத்தில் ஒரு சப்தம். டாக்டர் பெரேராவுக்கு தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெங்காய மாலை.

அது சறுக்கி விட்டது. யாழ்ப்பாணத்தவருக்குரிய ஆறுவது உணர்வு வெற்றியில்லை என்பதைநேரகாலத்துக்கு அறியவைத்தது.

சிறிமாவோ அம்மையார் ஆட்சியில் அரசியல் கோளாறுகள் பல இருந்த போதும் வெங்காயம், மிளகாய் வடபகுதிவிவசாயியை எழுப்பி வைத்தது, யாழ்ப்பாணத்தின் இன்றைய இளைஞர் தமது 'மன்னே'ரைப்போல் திக்கனமாக அமைதியாகப் பண்ணை வைத்துதொழிலை இன்றைய தமிழில் (வேலையை)க் கொண்டுபோகவில்லை. அனுவசியமாக'பென்ஸ்'போன்ற அலங்காரக் காரில் பவனி செய்து சாதனையை விளம்பரப்படுத்தினார்கள்.

அம்மையார் ஆட்சி முடிவடைந்து அரசியல் உரிமை இழந்து யாழ்ப்பாணம் வந்தபோது அனுதாப நோக்கில் அவருக்கு மிளகாய், வெங்காய மாலை கழுத்தில் விழுந்தது.

பொதுவாக தமிழ்மக்கள் நன்றி மறவாத சமுகமென்பதால் என்றும் உய்யவழி உண்டு என்ற நம்பிக்கை நிலவுகின்றது. இது ஒரு உதாரணம்,

கலவரத்துடன் வந்து, அடிக்கடி கலவரம் கண்ட காண்கின்ற இன்றைய ஆட்சியின் சர்வதேச புகழ்பெற்ற சாதனை கட்டுப்பாடற்ற — திறந்த — பொருளாதாரம் வடபகுதி வெங்காய உற்பத்தி செழிப்படைவதற்கு. பெரும்பான்மை மக்கள் நெருப்பு விலை கொடுக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுந்தது.

கட்டுப்பாடற்ற இறக்குமதி சொன்னது கேட்கும். ''வெங்காயவிளைச்சல் கம்மி; விலையேற்றம்'' என்றதும் கப்பல் கணக்கில் வந்தது வேண்டிய வெங்காயம்; முடிந்தது வடபகுதி வெங்காயச் செய்கை; வெளிநாட்டுத் தொழிலுக்கு ஓட்டமெடுத்தனர் விவசாய இளைஞர்.

வெங்காய விவகாரம் சுமுகமாக முடிந்ததா?

பம்பாய் வெங்காயம் இன்று ஒரு கிலோ 90 ரூபாய்க்கு கறுப்புச் சந்தையில் விலைப்படுகிறது. அரசும் அமைச்சர்களும் 15 அல்லது 20 ரூபாய்க்கு தங்கள் ஏற்பாட்டில் விலைப்படுகிறதெனக் கனவுகண்டு கொண்டிருந்தனர்.

இறக்குமதி போதாது; அளவுக்குமிஞ்சி இறக்குமதி செய்தாலும் அதனைப் பேணும் வசதி இங்கில்லை; அத்துடன் கதை முடியவில்லை. இங்கு வந்து சேரும் 'ஸ்ரொக்' நேரில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்துக்குப் போனாலும், ஈற்றில் தனியார் விற்பனை நிலையங்களில் வந்து பதுக்கிப் பாதுகாக்கப்படும்.

கப்பல் வரத் தாமதித்தால் தனியார் நிறுவனங்கள் பெருந்தொகை சிதனத்துக்கு தயார்ப்படுத்துவதில் என்ன தவறு?

இங்கும் வடபகுதியில் இன்னொரு பகுதி உயர இருமுண்டு. விவசாயிகள் அல ..

இன்றைய நெருக்கடியில் தனியார் துறையினருக்கும் வெங்காய இறக்குமதிக்கு உத்தரவு கிடைத்துள்ளது.

பட்டகாவிலே படுமென்ற பாங்கில் வெங்காயக் கப்பல்கள் காணாமற்போனதும் கடலில் மூழ்கினதும் நெருக்கடிக்கு இன்னொரு காரணம்.

யாரைக் குறை சொல்வது? சென்ற மாதம் ஆயிரம் தொன் வெங்காயம்— 50 லட்ச ரூபாய் பெறுமதி வைப்பிடமில்லாது அழுகி உதவாமற்போனது.

வெங்காயம் மிக அருமையான அவசியமானஉணவுப் பொருள்; இதற்காகவே ஆங்கிலேயர் தம் பிள்ளைகளுக்கு Onions என்றுபெயரிடுகின்றனர். அதுமட்டுமல்ல; 'விடயத்தை செவ்வனே புரிந்துகொள்' என்பது ஆங்கிலத்தில் "Know your onions" என்று சொல்லப்படுகிறது.

நம்முடைய போக்கு முழுமாறுனது. வெங்காயத்துக்கு இக்கதி ஏற்பட்டது, 'வெங்காய அரசியலால்' என்ற கேலியுடன் முடித்துவிடுகிறோம்.

கலை இலக்கியத்துறைகளில்

# அரிய பணிபுரியும் அரியாலை கலைமகள் சனசமூகநிலையம்

## முக்கிய மூன்று கலைஞர்களைக் கௌரவிக்கின்றது

—ஐ. சண்முகலிங்கம்—

'கலை மகள் நாடக சபா' ஒரு காலத்தில் நாடு பூராவும் பிரபல்யம் பெற்றிருந்தது. நாட்டுக்கூத்து, புராண நாடகங்கள், அரச நாடகங்கள் உட்பட சமூக நாடகங்கள் பல வற்றையும் அக்காலத்தில் மேடையேற்றியது. இந்நாடக சபா மூலம் கலைஞர்களையும், கவிஞர்களையும் உருவாக்கிய பெருமை மிக்க அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் இன்றும் கலை, இலக்கியத் தொண்டினைத் தொடர்ந்தும் செய்து வருகிறது. இச் சனசமூக நிலையம் இம்மாதம் 23ம் 24ம், 25ம் திகதிகளில் தனது 38வது ஆண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை நிலையத் தலைவர் திரு. ஏ. வீரசிங்கமும், பொதுச் செயலாளர் திரு. செ. செல்வகுமாரும் செய்து வருகின்றனர்.

38வது ஆண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்ச்சியிலே முதுபெரும் கலைஞர்கள் இருவரும், நாடறிந்த கவிஞர் ஒருவரும் பாராட்டுப் பெறவுள்ளனர். பாராட்டுப்பெறும் கலைஞர்களை வாழ்த்தி திரு. சொக்கலிங்கம் (சொக்கன்) கலாநிதி சு. மோகனதாஸ், நாடகமணி வி.வி. வைரமுத்து ஆகியோர் பேசவுள்ளனர். இத்துடன் பாராட்டுப்பெறும் கலைஞர்களான திரு. வே. ஐயாத்துரை, திரு. க. இரத்தினம், திரு. கு. கந்தையா ஆகியோரது கலைச் சேவைகளையும், கலைமகள் சனசமூகம் இது வரை ஆற்றிவந்த இலக்கிய கலைப் பணிகளையும் உள்ளடக்கியதாக 'கலைப் புகழ் விழா மலர்' ஒன்றினையும் மேற்படி விழாவில் வெளியிடவுள்ளனர்.

பாராட்டுப்பெறும் கலைஞர்கள்:

**கவிஞர்**
**வே. ஐயாத்துரை**

அரியாலையூர் கவிஞர் திரு. வே. ஐயாத்துரை அவர்கள் இதுவரை நூற்றுக்கணக்கான கவிதைகளை எழுதியுள்ளார். இவரின் கவிதைகளை வெளியிடாத பத்திரிகைகள், சஞ்சிகைகள் இல்லை எனத் துணிந்து கூறலாம். வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் இவரின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. நாடு பூராவும் தெரிந்த கவிஞராக இவர் திகழ்வது அரியாலையூருக்கே பெருமையைத்தேடித் தந்துள்ளது.

இசையுடன் கவிதைகளைப் பாடிடும் தனிச் சிறப்புமிக்க இவர் கவிதைப் போட்டிகள் பலவற்றில் பங்கு கொண்டு பரிசுகளை தாராளமாகப் பெற்றுள்ளார். காந்தி நூற்றுண்டு கவிதைப் போட்டியில் இவர் முதற் பரிசு பெற்றது மட்டுமல்ல இப்பரிசினை அன்றைய நாட்டுத் தலைவர்கள் மத்தியில் 'சுகததாச அரங்கில்' திருமதி

(5ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிச்சிந்தனை

### திருநீற்றுப் பெருமை

அகத்தியர் இந்திரனுக்கு விபூதியின் பெருமைகளை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கும் வேளையில் அங்கு வருணதேவர் சென்றார். அகத்தியர் வருண தேவர் வந்ததைக் கவனிக்காமலே விபூதியின்மீது தான் கொண்ட மதிப்புக்குத்தக அதன் பெருமைகளை விஸ்தாரமாகக் கூறிக்கொண்டிருந்தார். சிறிதுநேரம் அகத்தியரின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவருணன் பொறுமையிழந்து அகத்தியரே விபூதியைப் பற்றிக்கூறியபோதும் நான் அசுரர்களால் துன்புற்று வந்திருக்கிறேன். என்முறைப்பாட்டை இருவரும் கேளுங்கள் என்று முறையிட்டான். விபூதியைப்பற்றிக் கூறியது போதும் என்று வருணன்கூறியது விபூதியை நிந்திப்பதாய் அமைந்தது என்று அகத்தியர் வருணனுக்குச் சாபமிட்டாரென்றும் வருணனும் இந்திரனும் அகத்தியரை வணங்க அகத்தியர் வருணனுக்கு ஏற்பட்ட அசுரர்களின் தொல்லை விபூதியின் மகிமையாலே நீங்குத்தக்கதாக சாபவிமோசனம் அருளினர்என்று ஒருவரலாறு உண்டு

இக்கதையிலிருந்து விபூதியின்மகிமை அகத்தியராலும் கூடச்சொல்லிமுடிக்க முடியாதது என்பதையும் விபூதியைப் பற்றிப்பெரியோர் சொல்லிக் கொண்டிருக்கும்போது விசுவாசத்துடன் கேட்பதன்றி அப்படிச்சொல்வதை அலட்சியம் பண்ணுவதோ தடுப்பதோ சாபத்தை உண்டாக்கத்தக்க பாபம் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

திருஞானசம்பந்தப் பெருமான் பாண்டியனின் வெப்பத்தை திருநீறு அணிந்துநீக்கியது எல்லோரும் அறிந்த உண்மையாகும். ஞானசம்பந்தர் மந்திரமாவது நீறு என்ற பதிகத்தால் திருநீற்றை வணங்கிய பின்பே தமது திருக்கையால் திருநீற்றை பாண்டியனுக்கு அணிவித்தார். இந்நிகழ்ச்சியை ''திருநீற்றைப்போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்'' என்று ஞானசம்பந்தரே திருநீற்றுப்பதிகத்தில் கூறியுள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் திருவண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி



—செ. இரத்தினசபாபதி—

முருகப் பெருமான் கோயில் கொண்டருளிய ஆறு தலங்களில் திருச்செந்தூர் பிரசித்தி வாய்ந்தது. அங்கு நடந்த திருவிளையாடல்கள் பல இக்கலியுகத்திலேயே ஐந்து வயதுவரை ஊமையாகயிருந்த குமரகுருபரரை ஆட்கொண்டு கந்தர் கலிவெண்பா பாடுவித் ததலம் திருசெந்தூர் செந்தில் முருகன் அருட்திரு நோக்குக்கு விலை இல்லை என்பதற்குக் பின்வரும் பாடல் ஒரு சான்றாகும்.

''கத்தும் தரங்க மெடுகெ தெறியக்
கடும் சூலுளைந்து வலம்புரிகள்
கரையிற்றவழ்ந்து வாலுகத்திற்
கான்றமணிக்குவிலையுண்டு''

தத்துங்கரட் விகடதட
தந்தி பிறைகூன் மருப்பில் விளை
தரளம்தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்த மணிக்
கொத்தும் சுமந்த பசும் சாலிக்
குளிர் முத்தினுக்கு விலையுண்டு
கொண்டல் தரு நித்திலந் தனக்கு
கூறும் தரமுண்டு, உன்கனிவாய்''

''முத்தம்தனக்கு விலையில்லை
முருகா முத்தம் தருகவே
முத்தங் கொளிக்கும் கடல் அலை வாய்
முதல்வா முத்தம் தருகவே''

குமரகுருபரர்

ஐஸ்வரியம், வீரியம், புகழ் ஞானம், வைராக்கியம், என்னும் அறு குணங்களே, ஆறு முகங்களாகவும் பிரணவமே மயில் வாகன பீடமாகவும், இச்சை கிரியை, ஞானம், என்னும் முச்சக்திகளே, வள்ளி தெய்வானை வேலாயுதமாகவும் கொண்டு விளங்குபவர் முருகப் பெருமான். இத்தலத்தின் தெய்வ சான்னியத்தை அங்கு சென்று முருகனைத் தரிசித்தவர்களே அறிவர்.

இப்படிப் பெருமையும், மகிமையும் வாய்ந்த செந்தில் முருகனின் திருத் தோற்றத்தை திருசெந்தூர் சென்று தரிசிக்க இயலாதவர்கள் திருவண்ணைக் கதிரேசன்கோயிலில் தினந்தோறும் கண்குளிரக் கண்டு தரிசிக்கலாம்.

சென்ற வியாழன் லட்க்ஷார்ச்சனை ஆரம்பமாகி நடைபெற்று ஆனிமாதம் 8ம்திகதி (22-6-84) மணவாளக் கோல வைபவத்துடன் பூர்த்தியாகிறது. மாலையில் சந்தனக் காப்பு சாத்தப்பட்ட திருமுருகனின் அருள் நோக்கும், திருச்செந்தூர் முருகனின் திருநோக்குக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை என்பதே பல அடியார்களின் அபிப்பிராயம். செந்தில் முருகனே அங்குமிங்குமிருந்து தம்மைச் சரணடைந்து துதிக்கும் பக்தர்களுக்கு அவர் அவர் அன்புக்கிசைந்தவாறு கருணையங் கடலாகிய கந்த பெருமான் அநுக்ரகம் புரிகின்றார் என்பதற்கு ஐயமில்லை. கதிரேசன் கோயில் சந்நிதியில சாயரட்சை வேளையில் சந்தனக்காப்புடன் காட்சியளிக்கும். வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானை பயபக்தியுடன் உற்று நோக்கியவர்களுக்கு இவ்வுண்மை புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர் முன்னேற்றத்திற்கு பனைவளம் உதவுகிறது"

[யாழ்ப்பாணம்]

தமிழர்களின் பொருளாதார ஈடேற்றத்துக்குக் கிடைத்த மூலப் பொருட்களில் பனை இன்று முதல் இடத்தை வகித்துவருகிறது.' என்று பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழுத் தலைவர் திரு. இராஜசிங்கம் தெரிவித்துள்ளார்

யாழ் கொட்டடியில் பனம் பொருட்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட கைப்பணிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே திரு. இராஜசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

''பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுவின் அனுசரணையுடன் தொடங்கப்பட்ட இக் கைப்பணிப் பயிற்சியில் கொட்டடியைச் சேர்ந்த 20 மகளிர் ஈடுபட்டு வந்தனர்.

தமிழ் நாட்டிலிருந்து வந்த பனம் பொருள் துறை விற்பன்னர் திரு. சம்பந்தம் வழங்கிய ஆலோசனையின் பேரில் இப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சிறந்த கைப்பணிக்கான முதலாவது பரிசு மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி கமலாஜினி தியாகராசாவுக்கு வழங்கப்பட்டது.

மேற்படி இணைப்புக் குழுவின் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன், துணைத் தலைவர் திரு. ஆறுமுகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (மா)

## சிரமதானம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் பழை தலையிட்டி ஞானவைரவர் ஆலய உற்சவத்தை யொட்டி ஆலய சுற்றுடலை வீமன்காமம் மகா வித்தியாலய மாணவர்கள் சிரமதான மூலம் செப்பனிடுவதில் ஈடுபட்டனர்.

அதிபர் திரு. மு. சிவராசா மற்றும் ஆசிரியர்கள் மேற்பார்வையில் இந்த சிரமதானம் இடம் பெற்றது.

## பரிபாலனசபை ஆரம்பக்கூட்டம்

[சுழிபுரம்]

சுழிபுரம் பறுளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலனசபை ஆரம்பக் கூட்டம் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது நீதிமன்ற பதிவாளரால் கூட்டப்படும் இக் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மட்டும் அழைக்கப்பட்டுள்ளனர். புதிய தலைவர் செயலாளர் மற்றும் காரியகமிட்டியினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரமே இக் கூட்டம் நடைபெறுகிறது. மேற்படி ஆலயத்தில் அபிவிருத்திச் சபையும் ஒன்று செயல்பட்டு வருவதுடன் புதிய தேர் செய்தல் கோவில் இராச கோபுரம் கட்டல் போன்ற செயல்களையும் செய்து வருகின்றனர்.

## கவிதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் ரி. அன்ரனின் 'கோடுகளும் கோலங்களும்' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா இம்மாதம் 26-ம் திகதி பல்தொழில் நுட்பநிறுவன மண்டபத்தில் பிரேமானந்தன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

## பஸ் சேவை சீர்கேடு

[சுழிபுரம்]

காரைநகர்- மானிப்பாய் வீதி இ. போ. ச பஸ் சேவை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதே போல் தனியார் பஸ்சேவையும்நடைபெறுவது மிகக் குறைவாகவுள்ளது. தினமும் அதிகாலை தொடக்கம் பஸ் வண்டிக்கு காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்புவோர் தொகை தினமும் அதிகமாக வுள்ளது.

குறிப்பாக,சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம், ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். காலை கந்தோர் செல்பவர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். (கி)

# சுன்னாகம்—தாளையடி ஸ்ரீஹரிகரபுத்திர ஐயனார்

இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த எம்பிரான் மக்களை எவ்வித நோய், நொடி துன்பம் இன்றிக் காத்தருளி வருகின்றார்.

மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றுப் புதுப் பொலிவுடன் துலங்கும் ஆலயத்தில் எம்பிரான் தன்னை நம்பிய பக்தர்களின் துயர் துடைப்பதற்காகப் பல அற்புதங்களைச் செய்தருளியுள்ளார். நெல்வயலில் நடைபெற்ற ஒரு கொலைச்சம்பவம் பல காலங் கடந்தபின் வழக்கு விசாரணையின்போது சாட்சியின்றி தத்தளித்த மனைவியின் வேண்டுதலால் சாட்சியாகத் தோன்றியும் திருக்கோயிலுள் நடைபெற்ற பல்வேறு திருட்டுக்களை மக்களுக்கு அம்பலப்படுத்தியும் உண்மையை உணர்த்தியுள்ளார். ஆதியில் மிகச்சிறியளவில் தாளை மரங்கட்கிடையில் 'ஐயனை' வழிபட்டுவந்தமக்கள் காலப்போக்கில் முன்பிருந்ததைவிடப்பெரிதான முறையில் கோயிலமைத்து பூசைகளையும் திருவிழாக்களையும் திருவிழா முடிவுற்றதும் பொங்கல் விழாவின்போது 'மிருக பலி' இட்டும் தமது நேர்த்திகளை செலுத்திவந்தனர்.

இவ் ஐயனாலயத்தில் திருவிழாக்கள் மட்டுமன்றிச் சிவராத்திரி, நவராத்திரி, தைப் பொங்கல், தீபாவளி, பங்குனி

### ஏ. ஜெயசிறிபவன்

உத்தரம், கந்தசஷ்டி என்பனவும். விசேடமாக நடைபெறும்.

இவற்றுடன் வருடாவருடம் மகாசங்காபிஷேகமும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. இன்று ஐயனின் மகாசங்காபிஷேக நன்னாளாகும். இரவு திருக்கல்யாண வைபவமும் வெகுசிறப்புடன் கொண்டாடப்படும். சுன்னாகம் தாளையடி ஐயன் மீது சில சைவ நற்சிந்தனையாளர்கள் பாடல்களும் புனைந்துள்ளார்கள். அந்தவரிசையில் சுன்னாகம் முத்துக்குமார கவிராஜர் ''ஐயனார்மீது திருவூஞ்சல்'' பாடியுள்ளார்.

குளத்துப்புழாவிலே பாலயோகியாகவும், அச்சங்கோவிலிலே வானப்பிரத்தனாகவும், ஆரியங்காவில் கிரகத்தனாகவும் எருமேலியிலே வேடனாகவும், சபரிமலையில் சாஸ்தாவாகவும் காந்தமலையில் சீவன்முத்தனாக அரிஹரி புத்திர ஐயப்பன் அவதரித்து அருள்புரிந்த ஐயனார், சுன்னாகம்-தாளையடி ஸ்ரீ அரிகர புத்திர ஐயன் ஆலயத்தில் பக்தர்களுக்கு அருள்புரிந்து கொண்டிருக்கிறார்.

## வெள்ளிச்—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானசம்பந்தப் பெருமானுக்கு திருமணக்கோலம் செய்யும்போது பட்டாடை முத்து மாலைகள் அலங்காரப்பொருட்களை திறமைமிக்க அந்தணர்கள் அணிவித்தனர் என்றும். விபூதி உருத்திராக்கத்தை ஞானசம்பந்த சுவாமிகள் தாமே அணிந்துகொண்டார் என்றும் சேக்கிழார் கூறுவார். ''அழகினுக்கணியாம் வெண்ணீறுஅஞ்செழுத்தோதிப்பூசி'' என்றும் ''எவ்வுலகோருமேத்தத்தொழுதுதாம் எடுத்துப் பூண்டார் திருவடையாள மாலை'' என்றும் சேக்கிழார் திருஞானசம்பந்த சுவாமிகள் புராண மூலம் விபூதிருத்திராக்கங்களின் மகிமைகளைப் பாடுகின்றார்.

அழகினுக்கணியாம் வெண்ணீற்றை இன்று பல சைவசமயிகள் அவமானச்சின்னமாகக் கருதுவது வேதனைக்குரியதாகும். பலர் எள்ளளவுக்களவு நீற்றை நெற்றியில் பிறருக்குத் தெரியாதவாறு அணிந்து கொண்டு மீதியைக்காற்றில் ஊதிவிடுகிறார்கள் என்று வருணிப்பார் வாரியார். சிவபெருமான் சுந்தரரைத்தடுத்தாட் கொள்ள அந்தணவடிவுடன் சென்றபோது வெண்ணிறம் மிகுத்ததுணியொன்றை நெற்றியில் கட்டியிருக்கிறான்ரோ என என்னும்படி நீணிந்திருந்திருந்தார் என்பர். திருநீற்றை நெற்றியிலும் ஏனைய அங்கங்களிலும் பிரகாசமாக அணிவதால் அழகு — நோய் நீக்கம் முதலிய நற்பயன்கள் ஏற்படுவது மட்டுமன்றி சிவபெருமானின் திருவருளும் எளிதில் கிடைக்கும் என்பதையும் நம் சமய சின்னத்தை நாமே போற்றுதல் வேண்டும் என்னும் அபிமானத்தையும் சைவ சமயத்தினர் உடையராயிருத்தல் அவசியம்.

மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தலினும் பார்க்க மிகமிகச் சுலபமானது உடலை தூய்மையாக வைத்திருத்தல், உடலைத் தூய்மையாக வைத்திருப்பதுக்கு பேருதவி செய்வது திருநீறணிதல் திருநீற்றை விரும்பி நிறை அணிவதால் உடலும் படிப்படியாக உள்ளமும் தூய்மைபெறும். தூய்மையான உள்ளம் படைத்தவர் மகிழ்ச்சியடைதல் இயல்பு.

''கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே''
— திருமூலர்.

அருளாளன்.

# அரியபணிபுரியும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயலட்சுமி பண்டிட்டிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது

கலைமகள் நாடக சபாவின் ஆரம்ப இயக்குனராகவும், 'அடங்காப்பிடாரி' சுண்டிக்குளி நாடகமன்றத்தின் செயலாளராகவும் இருந்து நாடகத் துறைக்கும் பல சேவைகளை திரு. ஐயாத்துரை புரிந்துள்ளார். இவர் கவிஞர் மட்டுமல்ல நல்ல சிறந்தவொரு நாடக நடிகருமாவார்

கலைவாணியின் பெரும் பக்தரான இவரின் 'வெள்ளைக் கமலம்' என்கிற கவிதைத் தொகுப்பு 1975ல் 'யாழ் இலக்கிய வட்டத்தினரால் வெளியிடப்பட்டது. இத் தொகுப்பில் காணும் கவிதைகள் சில பரீட்சைகளின் போது மாணவர்களுக்கு கேள்வித்தாள்களில் இடம் பெறுவதினின்றும் இவரின் கவிதைச் சிறப்பினை நாம் அறிகின்றோம்.

### வி. கே. இரத்தினம்

'சந்திரமதி' இரத்தினம் என்றால் நாடக உலகம் நன்கறியும் நாடகக் கலைஞரான இவர் திரு. வி. வி. வைரமுத்துவின் நாடக குழுவில் நீண்டகாலம் பல நாடகங்களில் பெண் வேடம் தரித்து தமது கலைத் திறனை வெளியிட்டவர். மயானகாண்டத்தில் 'பாலகனை' இழந்து சந்திரமதி அழுதுபுலம்பிப் பாடுவது கேட்டு கண்டு உருகாத உள்ளம் இல்லை எனலாம். இனிய குரல் வளமும், தமக்கென தனியானதொரு பாணியும் கொண்டுள்ளமையே இவரின் பாத்திரச் சிறப்புக்குக் காரணமாகும். எல்லாரினாலும் பெண் வேடம் போட்டுவிட முடியுமா என்ன? ஆனால் திரு. இரத்தினம் சாவித்திரி, நல்ல தங்காள், பவளக்கொடி, ஸ்ரீ வள்ளி என்று பல பெண்பாத்திரங்களில் நடித்து ரசிகர்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டவர். 'அரியாலை கலாமன்றம்' ஒன்றினை உருவாக்கி இன்றும் நடிப்புக் கலைபற்றி இளவயதினர்க்கு கற்பித்துக் கொண்டு கலைத் தொண்டே தனது 'மூச்சு' என்றும் வாழ்ந்துகொண்டிருப்பவர் திரு. வி. கே. இரத்தினம். தலைநகரம் உட்பட நாட்டின் பல பாகங்களிலும் நாடகங்களை எதுவித இலாபமும் கருதாமல் நடாத்தியவர். பல பரிசுகளையும் பெற்றவர் இம்முதிய கலைஞர்.

### திரு. கு. கந்தையா

'காத்தார் கந்தையா' என்றால்தான் மக்கள் திரு. கு. கந்தையாவை நினைத்துக்கொள்வர். அந்தளவுக்கு அவர் 'காத்தவராயனில்' அன்று போட்ட வேசம் மக்கள் மனதில் இன்றும் நிலைநிது நிற்கிறது 'தென்மோடி' கூத்து உத்திகளை நன்கு தெரிந்து வைத்திருக்கும் இம்முதிய கலைஞருக்கு உள்ள ஒரே மனவருத்தம் என்ன தெரியுமா? 'ஏட்டுப் பிரதிகளை' அவைகளில் உள்ளபடியே பிரசுரம் செய்து காப்பாற்ற யார் முன்வந்துள்ளார்கள் என்பதுதான். இன்று 80 வயது எட்டியுள்ள இக்கலைஞர் இன்றும் கூத்துப் பழக்கங்களில் கலந்துகொண்டு கலைஞர்களுக்கு உதவுகிறார். அன்று 'தியாகராஜ பாகவதர்' போன்ற தலைமுடியுடன் மேடைகளில் ஏறி இவர் பாடினால்இன்றுபாவிக்கப்படும் ஒலிபெருக்கிகூட தோற்றுவிடும் அளவுக்கு இவரின் குரல் வளம் இருந்தது, இன்றுகூட அவர் பழைய கூத்துப் பாடல்களைப் பாடினால் கேட்பதற்கு மிக இனிமையாகவே இருக்கிறது. தென்மோடியுடன் 'கதகளி' ஆட்டத்திலும் இவர் சிறந்து விளங்கினார் சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட கூத்துக்களை ஆடிய இவர் ஒரு நாட்டுக்கூத்து கலைஞர் மட்டுமல்ல, சிறந்த ஒரு விசகடி வைத்தியருமாவார்.

## இல்லப் போட்டி

(மாவிட்டபுரம்)

வீமன்காமம் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது

காங்கேசன் துறை வட்டாரக் கல்வியதிகாரி, திரு பொ சிவஞானசுந்தரம் இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்.

## இளைஞர் கழகம்

(கிளிநொச்சி)

பரந்தன் குமரபுரத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் சேவை அதிகாரி கே. பரராசசேகரம் பிரதம விருந்தினரரக கலந்து கொண்டு இளைஞர் கழகத்தை அங்குரரப்பணம் செய்து வைத்தார்.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:-எஸ். தங்கேஸ்வரராசா, உபதலைவர்:- ஆர் சீமோராணி,செயலாளர்:- கே கிருஷ்ணகுமார், உபசெயலாளர் எஸ். புஸ்பராணி பொருளாளர்:-எஸ். ரவீந்திரன்.


ஹோம் பினன்ஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்
யாழ். புடவை வியாபாரிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
எம்மிடம் பணம் நிலையாக
வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
30% வருடவட்டி வழங்குவதுடன்
புடவை வகைகளும் கடன் வசதியுடன்
வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்
NATIONAL DELUXE
மின் விசிறிகள்
கடன் வசதியுடன் உண்டு
விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கி. அபி. சங்க நிர்வாகம் கலைப்பு

[சுழிபுரம்]

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாகம் யாவும் கலைக்கப்பட்டுள்ளது. புதிய நிபந்தனைகளுக்கு அமையவரும் யூலை மாதம் பதினைந்தாம் திகதிக்குப் பிந்தாமல் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று ஓர் சுற்று நிருபம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவ்வப் பகுதி கிராம சேவையாளர் மேற்பார்வையில் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது

# வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் சாதனை

(யாழ்ப்பாணம்)

''1983 ஆண்டில் 50 முழு அங்கத்தினரும், 50 பூரணமில்லாத அங்கத்துவம் செலுத்தியோரும் எங்கள் நிறுவனத்திலுண்டு. வசதி குறைந்தோருக்கு உதவி செய்யும் நோக்கோடு எங்கள் நிறுவனத்தில் அங்கத்தவராகச் சேருமாறு அநேகரை வேண்டுகின்றோம். கடந்த ஆண்டில் அங்கத்துவமாகவும், நன்கொடையாகவும் நிதி நிறுவனங்களிடமிருந்தும் 68,650ரூபா கிடைத்துள்ளது. செயற் திட்டங்களுக்காக 41,523 ரூபா செலவு செய்துள்ளோம். 1983ம் ஆண்டு முடிவில் நிறுவனத் திடம் 44,078 ரூபா 28 சதம் மிகுதியாகவுள்ளது. பலவகையிலும் எமக்கு உதவிபுரிந்த பெருமக்களுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்''

இவ்வாறு வதிரி அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் திரு. மூ. சி. சீனித்தம்பி, செயலாளர் திரு. த. துரைராசசிங்கம் ஆகியோரால் வெளியிடப்பட்ட 1983ம் ஆண்டுக்குரிய முன்னேற்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

''கைத்தொழில் அபிவிருத்திச்சபையினரால் குறைந்த செலவில் வீடுகள் கட்டுதல் என்னும் பொருள்பற்றி வீரசிங்கம் மண்டபத்தில் ஐ. நா. பிரதிநிதி திரு. சிங்கிளுல் நடாத்தப்பெற்ற பயனுள்ள விரிவான கருத்தரங்கில் தலைவர், பிரதிச் செயலாளரோடு திரு. பொ. ஜெயநாதன் எங்கள் நிறுவன சார்பில் இதில் பங்கு பற்றினர்.

### செயற்திட்டம்

எங்கள் ஆடு வளர்ப்புத்திட்டத்திற்கு ஜெர்மன் நிதிநிறுவனம் மிசறியோர் 60,000 ரூபாவை வழங்கியது. வசதி குறைந்த 60 குடும்பங்களுக்கு நல்லின மறிக்குட்டிகள் இப்பந்தனைகளுக் கமையவழங்கப்பட்டு வருகின்றன. இவைகளை வெளியில் அவிட்டு விடாது கொட்டிலில் வளர்க்கவேண்டும். தீனிக்குத் தேவையான புல், முள்முருக்கு இப்பில் - இப்பில் வளர்ப்பதற்கு வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து எட்டு மாதங்களுக்குத் தேவையான ஆட்டு மாஸ் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. செயற்கைச் சினைப்படுத்தலும் புலோலி மிருக வைத்தியசாலையில் நடத்தப்பட்டு வருகிறது. ஆடு பெறுபவர்கள் முதல் ஈனும் மறிக்குட்டியை ஆறு மாதங்களுக்கு வளர்த்து நிறுவனத்திற்கு அன்பளிப்புச்செய்வதன் மூலம், இன்னும் அநேருக்கு இவைகளை இலவசமாக வழங்கலாம்.

### நன்னீர்த்திட்டம்

எங்கள் கிராமத்திற்கு நன்னீர்த்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு இது சம்பந்தமான புவியியல் ஆய்வு மட்டம்பார்த்தல் போன்ற பூர்வாங்கவேலைகள் யாழ் நீர்வளச்சபையினரால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இதற்குப் பேருதவி புரிந்த பிரதேச முகாமையாளர் திரு. மகேந்திரன், திரு. குமாரசுவாமி, திரு. பாலநாதன் மற்றும் அலுவலர்களுக்கும் எமது நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

### கடனுதவித்திட்டம்

கடந்த ஜூலை கலவரத்தில் பாதிக்கப்பட்ட 47 பேருக்கு தலா 200ரூபாவைசிறுதொழில் செய்ய கடனக வழங்கியுள்ளோம். வதிரி கிழக்கு சமுதாயக்கிணற்றைப்பூர்த்தி செய்ய தமிழ் மன்றத்திற்கு கடனக 2,000 ரூபாவை வழங்கினேம். இதில் 1,000 ரூபா மட்டுமே திருப்பித்தரப்பட்டது. இக்கடன் பேரால் இன்னும் 1,000 ரூபா வருமதியுண்டு.

தோல்பொருள் ஏற்றுமதி செய்வது சம்பந்தமாக ஸ்ரீலங்கா ஏற்றுமதி ஊக்குவிப்புச் சபைத் தலைவர் திரு. விக்ரர் சந்தியாபிள்ளை, உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வேலும்மயிலும், தலைமை காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. சண்முகலிங்கம் ஆகியோர் ஒருகலந்துரையாடலுக்குவந்திருந்தனர். ஏற்றுமதி செய்ய பிரயாணப்பொதி, கையுறை உற்பத்தியில் கவனம் செலுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

கடந்த ஜூலை இனக்கலவரத்தில்பாதிக்கப்பெற்ற பாதணி உற்பத்தியாளரிடையே ஒரு சமூக பொருளாதார ஆய்வு நடத்தப்பெற்று, அதன் பேரில் நிறுவனமொன்று இவர்களுக்கு உதவ முன்வந்தது இந்நிறுவனத்தின் திட்டத்தை முதலில் ஏற்றுக்கொண்டவர்கள், அவர்களுக்கே தெரிந்த காரணங்களுக்காக பின்பு ஒத்துழைப்புத் தராததினல் இத்திட்டம் கைவிடப்பட்டது.



வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இலவச தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்பை வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரச அதிபர் திரு. வை. வேலும்மயிலும் யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. வீ. எஸ். சுவாமிநாதன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதையும் அருகில் திட்ட அமைப்பாளரும், பயிற்சிப் போதனசிரியருமான திரு. வி. சிவச்சந்திரதேவன், வங்கி முகாமையாளரும், ஊழியர் நலன்புரிச் சங்கத்தலைவருமான திரு. எஸ். சேனுதிராசா ஆகியோர் நிற்பதையும்காணலாம்.

(படம் புலோலி நிருபர் திருச்செல்வம்)

# இன்றைய பலன்!

மாதம்—ஆனி
திகதி 8 (22-6-1984)
வாரம்—வெள்ளி
திதி—நவமி முழுநாளும்
நட்சத்திரம் — உத்திரட்டாதி பகல் 12-35ன் மேல் ரேவதி

மேடம்: தொழில்புரியுமிடத்தில் கருத்துவேற்றுமை தோன்றக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளை தேடிக்கொள்வீர்கள்

இடபம்: கணிப்புத் திறமையால் பெரும்புகழ் கிடைக்கும் பெரிய இடத்து சகவாசம் உங்களுக்கு செல்வாக்கைத் தேடித் தரும் அதிர்ஷ்டமான தினம்.

மிதுனம்: உடல்நலம் சிறிது பாதிக்கப்படும் வைத்தியவழிகளில் பணம் செலவாகும் சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு எண்ணிய கருமத்தில் தடையேற்படும்.

கடகம்: வாகனம் செலுத்துவோர் இன்று நன்மதிப்புபெறுவர் தாய்வழி தன வரவிற்கும் இன்று இடமுண்டு முன்னேற்றகரமான சுபதினமாகும்.

சிங்கம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் காலடியில் கிடைக்கும் நண்பர் ஒருவருக்கு கை கொடுத்து உதவுவீர்கள்.

கன்னி: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் சிறிய விடயத்திலுங்கூட குறைகேட்க நேரிடும் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

துலாம்: தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும் குடும்பத்தில் தென்றல் வீசும் சுவையான நிகழ்ச்சிகள் இடம் பெறும் அறிஞர்களுக்கு சுவையானதினம்.

விருச்சிகம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரும் தன் கையே தனக்குதவி என்று செயலாற்றவும் மறைமுக எதிரிகள் உளவு விடயத்தில்பிரியக் குறைவு ஏற்படும்.

தனுசு: இறைவழிபாடுமேலிடும் இதன் மூலம் இல்லத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

மகரம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள் கவர்ச்சிகரமான பொருள்களை வாங்குவதிலும் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

கும்பம்: புதுமையான சம்பவங்கள் இடம்பெறும் சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர் வருகை உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

மீனம்: நடையில் தயக்கம் ஏற்படும் உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும் உடல்நலம் சிறிது பாதிக்கப்படும்.

திருமலை
வே. ரவீந்திரன்


மாணவர்களே — ஓர் நற்செய்தி
G. C. E O/L Dec. பரீட்சையில்
ENGLISH LANGUAGE
திறமைச்சித்தி பெறவேண்டுமா?
ஆசிரியர் திரு. பஞ்சாட்சரம், திரு. சபாநாயகம் ஆகியோரின் இணைந்த சேவை.
வகுப்புகள் சனி, ஞாயிறு, தினங்களில் மட்டுமே.
8 a. m, — 10 a. m.
ஆரம்பம்: 23 – 6 – 84
G. C. E. A/L ENGLISH
(85 Aug. பரீட்சைக்குரியது)
ஆசிரியர் திரு. T. N. பஞ்சாட்சரம்
வகுப்புகள் திங்கள். புதன் தினங்களில் மட்டுமே
9 — 11 a. m.
ஆரம்பம்: 2 – 7 – 84
* இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
விபரங்களுக்கு.
ASTAN INSTITUTE
16¹/1. HOSPITAL ROAD. JAFFNA.



HONDA
மலிவு விற்பனை

| மொடல் | தற்போதைய விலை | விசேஷ கழிவு |
|---|---|---|
| C-70 | 16,600/- | 1,200/- |
| C-90 | 18,400/- | 1,300/- |

முடிவு திகதி - 29-06-84
STOCKS LIMITED!
HURRY!
கன்ராபியா
லிமிட்டெட்
21, மெயின் வீதி, (போன்: 24201) யாழ்ப்பாணம்.



சிசில் குளிர்சாதனப் பெட்டிகள்
(REFRIGERATORS)
பாவனையாளர்களுக்கு ஓர் அருமையான வரப்பிரசாதம்
★ குளிர் சாதனப் பெட்டியின் மோட்டருக்கு (COMPRESSOR UNIT) இப்பொழுது ஐந்துவருட உத்தரவாதம். மற்றைய உறுப்புகளுக்கு ஒரு வருட உத்தரவாதம்.
★ விற்பனைக்கு பின்பு தாமதமற்ற சேவையும், சகல உதிரிப் பாகங்களும் எம்மிடமே பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு குளிர் சாதனப் பெட்டி சிசில் மாத்திரமே.
விலை ரூ. 8300/- தொடக்கம் ரூ. 9350/- வரை
★ குளிர் சாதனப் பெட்டிகள் பழுதடைந்து விட்டதா?
அனுபவம் வாய்ந்த தொழில் நுட்பர்களால் பழுது பார்த்தல், விரும்பிய நிறங்களில் வர்ணம் அடித்தல் போன்ற வேலைகளை மிகச் சகாயமான செலவில் உத்தரவாதத்துடன் நேர்மையாக செய்து கொடுக்கப்படும்.
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள் :
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்ரெற்
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22134


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
**லொறி ட்றைவர் ராஜாக்கண்ணு**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 2-30, 5-30
**மீண்டும் கோகிலா**

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ஜெமினி, சுஜாதா, கமல், தேங்காய்
**"லலிதா"**
(புதிய வண்ணப் பிரதி)

**ஹரன்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
**ஜானகி சபதம்**
ஜெய்சங்கர் - விஜயா
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ் நகர்)
இதுவேகடைசிச் சந்தர்ப்பம்.
தினசரி 10-30, 2-15
4-45, 7-00
THE POSTMAN ALWAYS RINGS TWICE
கலர் (கண்டிப்பாகவயது வந்தவர்களுக்கு)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
5-வது வெற்றி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)
விரைவில்
புரூஸ்லியின்
BIG BOSS

**றீகல்** (யாழ். நகர்)
22nd to 1st
10-30, 2-15, 4-30, 6-30
John Hurt......
**NIGHT CROSSING**
Color
கிழக்கு ஜெர்மனியை சேர்ந்த இரண்டு குடும்பங்கள் சந்தர்ப்பத்தை சாதகமாக்கி, பொலிசாரிடமிருந்து தப்பி வீட்டில் செய்த பலூன் மூலமாக 836 மைல் நீளமான முட்கம்பி வேலியை தாண்டி சுதந்திரமாகின்ற மயிர்க்கூச்செறியும்உண்மைக்கதை
Dont Miss This Film

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 3-30
5-30, 7-15
Top entertainment of the Day...
New way of Action Karate you have ever sean before
HENRY SANADA-SUE SHIOMI
**SHOGUN'S NINJA**
(Color)
இதுவரைவந்தகராட்டி, குங்பூ படங்களுக்கு மேலான இன்றைய உலகின் முதன்மையான 'NINJITSU' சண்டைக் கலையைக் கொண்ட இன்றைய இளைஞர்கள் பார்க்கவேண்டிய முதல்தர யப்பானியப் படம். குறிப்பிட்ட சில தினங்களுக்குமட்டும்,

பாடசாலை கிரிக்கெட் போட்டி:

# யாழ். மத்திய கல்லூரி சாம்பியனுகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினல், யாழ் மாவட்டக் கல்லூரிகளிடையே நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில், 17 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையில் நடைபெற்ற ஆட்டங்களில், யாழ். மத்தியகல்லூரி சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது, 2வது இடத்தை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி பெற்றது.

### சாம்பியன் மோதல்

15 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் சாம்பியன் மோதல், எதிர்வரும் வெள்ளியும் சனியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப்போட்டியில் யாழ். இந்துக்கல்லூரியும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் மோதும்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ்ப்பாண பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். அல்பேட் சந்தியாப்பிள்ளை செய்துள்ளார். (வி)

## யூனியன் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்படும் 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியை யூனியன் கல்லூரி தோற்கடித்தது.

யூனியன் கல்லூரி முதலாவதாகத் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். சிற்பவானந்தன் 23 ஓட்டங்களைப் பெற்றுர், சென் ஜோன்ஸ் கல்லூரி வீரன் வி. பாலமுரளி மூன்று ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி சகல விக்கெட்டுகளை இழந்து 78 ஓட்டங்களை மட்டுமே பெற்றது, என். ரூபன் 28 ஓட்டங்களைப் பெற்றுர். யூனியன் கல்லூரி வீரர் ரி. கேதீசன் 20 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றி யூனியன் கல்லூரியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

யூனியன் கல்லூரி இதன் முன்னர் நடந்த போட்டிகளில் முறையே யாழ். மத்திய கல்லூரியையும், சென். பற்றிக்ஸ் கல்லூரியையும் தோற்கடித்தமை குறிப்பிடத் தக்கது. (வி)

## இன்றைய வானொலியில்

காலை:
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப் பாடல்கள் வி. கணேசலிங்கம்
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமிய நற்சிந்தனை
6-10 பாமாலை
6-25 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
7-00 தலையே நீ வணங்காய்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 நாதஸ்வரம் - ஷேக் சின்னமௌலானு
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 ஒலிபரப்பு முடிவு

மாலை:
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-20 இப்தார் நிகழ்ச்சி
இ6-35 ஞானுபிர்தம்
7-05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8-00 உலகச் செய்திகள்
8-10 களத்துமேடு
8-25 இலலறஜோதி
8-40 நாட்டுப்பாடல்
8-45 யேசு - இலக்கண வரம்பு - செ. வேலாயுதபிள்ளை
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் - வாத்தியஇசை
9-30 மெல்லிசைப் பாடல்
9-45 கதாப்பிரசங்கம் 'பாதுகா பட்டாபிஷேகம்' திருமுருக கிருபானந்தவாரியார்
10-30 ஒலிபரப்பு முடிவு.

## புதிய நிர்வாகிகள்

(சுழிபுரம்)

சுகாதார அபிவிருத்திக் கழகத்தின் இரண்டாவது பொதுக் கூட்டம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மடண்பத்தில் கழகத் தலைவர் திரு. க. அருணுசலம் தலைமையில் நடைபெற்றது

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. அருணுசலம், இணைச் செயலாளர்கள்: திரு. ஏ. இராசநாயகம், திரு. க. வாமதேவன், தனதிகாரி: திரு. ந. சிவரஞ்சன். பதினைந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
பாக்கியராஜ் - சரிதா
**மௌன கீதங்கள்**

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-15
ஜெய்சங்கர்
**வண்டிக்காரன் மகன்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2.30, 6.30
கமலஹாசன் - மாதவி
**ராஜபார்வை**
[புதிய பிரதி] கலர்

## உடற்பயிற்சி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி இம் மாதம் 27ம் திகதி காலை யாழ், மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மெய்வல்லுநர் போட்டிகள் ஜுலை 4ம், 5ம், 6ம் திகதிகளில்நடைபெறவுள்ளன. (வி)

## நோர்வேயில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விலகக்கூடாது'' எனறும திரு. ஹரேந்திர சிங் கூறியுள்ளார்.

ஒச்சிக்சியரின் வயது 37 ஆகும். இவரின் இந்நடவடிக்கை குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு கவலை தெரிவித்தது. இவரது ராஜினமாவையடுத்து இவர் இந்திய வெளிநாட்டுச் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார் என்று அவ்வமைச்சு தெரிவித்துள்ளது. கூடவே இவரின் [illegible] குறிய, பொறுப்பற்ற நடவடிக்கை என்றும் அது தெரிவித்தது. (கி)

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்]

கோண்டாவில் விவேகானந்தா படிப்பகத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் மு, குமாரசாமி உபதலைவர் சி. குமாரசாமி செயலாளர் சு. சுந்தரம் உப செயலாளர் செல்வி சிவபாக்கியலட்சுமி பொருளாளர் மு. ஐயாத்துரை உபபொருளாளர் செல்வன் ரமேஷ்.

மற்றும் 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

## ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டுவளம்(ஆங்கிலம்)
5-35 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-30 இளை ஞர் விவசாரம்(சிங்களம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 சிங்கள நிகழ்ச்சி
7-45 ஆங்கில நிகழ்ச்சி
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 கம் உதாவ-84
9-05 ஆஸ்திரேலியா—பாகிஸ்தான் 5வது டெஸ்ட் பந்தயம் 83—84
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
9-50 டெஸ்ட் பந்தய தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 டெஸ்ட் பந்தய தொடர்ச்சி
10-50 நிகழ்ச்சிகள் முடிவு.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பண்டத்தரிப்பு என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை துரைராஜா என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல: ரி/ 200

துரைராஜா கைம்பெண் இரத்தினபூபதி தபாற் கந்தோர் வீதி, பண்டத்தரிப்பு.

எதிராக மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1984ம் ஆண்டு ஆடி மாதம் 11ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு சித்திரை மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஆழ்வார். சிவபாதசுந்தரம்
பதிவாளர்

சோமசுந்தரம். தேவராஜா
சட்டத்தரணி 409

## கால்நடை விற்பனை

திருநெல்வேலி கிருஷிக பாடசாலையிலிருந்து பின்வரும் கால்நடைகள் உடனடியாகக் கால்நடை வளர்ப்பவர்களுக்கு விற்பனைக்கு உண்டு. இக்கால்நடைகளை வாங்க விரும்புவோர், பண்ணை முகாமையாளருடன் தொலைபேசி (22379) மூலமாகவோ அல்லது நேரடியாகவோ உடன் தொடர்பு கொள்ளவும்.

| இனம் | தொகை |
|---|---|
| ஜேசி, சிந்தி கலப்பினம் — | பசுக்கள்-9 |
| பிறீசியன், சிந்தி ஜேசி கலப்பினம்- | கன்னிப்பசுக்கள்-2 |
| ஜேசி, சிந்தி கலப்பினம் — | பசுக்கன்றுகள்-7 |
| ஜேசி, சிந்தி தர்ப்பக்கார் கலப்பினம் — | நாம்பன்கன்றுகள்-11 |

பண்ணை முகாமையாளர்,
திருநெல்வேலி.
410

## CITY AND GUILDS OF LON DON INSTTUTES

TELECOMMUNICATION TECHNICANS COURSE
MAY / JUNE 1985
at
J. A. S. E. INSTITUTES.
றிம்மர் மண்டபம், வேம்படி றோட், யாழ்ப்பாணம்.
பயிற்சி ஆரம்பம்: 30-06-1984 (சனிக்கிழமை)
**T 1, T 2, and T 3 வகுப்புகள்**
நீண்டகாலத் தகுதியும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
கடந்த மூன்று ஆண்டுகளாக பரீட்சையில் அதிகமான மாணவர்களின் சித்திக்கு பயிற்சியளித்த
ஒரே நிறுவனம் **J. A. S. E.**
ஏனைய பயிற்சி நெறிகள்
**C. E. I. PART I**
ஆரம்பம்: 30 - 06 - 1984
**C. E. I. PART I**
ஆரம்பமாகிவிட்டது.
சொற்ப இடங்கள் மட்டும் உண்டு.
உடன் தொடர்பு கொள்க.
B.A. 1984 டிசம்பர் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.
PITMAN'S SHORTHAND TYPEWRITING
தொடர்பு:
பதிவாளர்,
**J. A. S. E.**
றிம்மர் மண்டபம், வேம்படி றோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பல்கலைக்கழகச் சம்பவங்களை சாதகமாக்க வேண்டாம்!'

(கொழும்பு)

''பல்கலைக்கழக மாணவர்களின் அசம்பாவிதங்களை எதிர்க்கட்சியினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடாது. பேராதனையில் ஒரு மாணவரும், கொழும்பில் ஒருவரும் பலியானது துர்ப்பாக்கிய சம்பவமாகும்.''

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுப் பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதானவிவாதத்தில்உரையாற்றுகையில் கூறினர்.

பேராதனைப் பல்கலைக் கழக சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய தெரிவுக்குழுவொன்றை 'நியமிக்கவேண்டுமென்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கைக்கு அமைச்சர் அத்துலத் முதலி பதிலளிக்கையில்: 'இதுதொடர்பாக மாஜிஸ்திரேட் விசாரணை இடம் பெறுவதால் தெரிவுக்குழு நியமனம் அவசியமில்லை'' என்று கூறினர்.

### 'சரத்' குற்றச்சாட்டு

பேராதனைப் பல்கலைக்கழக சம்பவம் தொடர்பாக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்று கலவான எம். பி. திரு. சரத முத்தெட்டுவேகம நேற்றுப் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் குற்றம் சாட்டினர். பல்கலைக்கழக மாணவர்கள் விடுதிகளிலிருந்து வெளியேறுவது தடுக்கப்பட்டது என்றும் திரு. சரத் முத்தெட்டுவேகம கூறினர்.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி இதற்குப் பதிலளிக்கையில் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதிகளிலிருந்து வெளியேறுவது தடுக்கப்படவில்லையென்றும், அவர்கள் இவ்விரண்டு பேராக வெளியேற அனுமதிக்கப்பட்டனர்'' என்றும் கூறினர். (வெ)

## மே. இ. தீவுகள் வெற்றி

(பமிங்காம்)

மேற்கிந்திய தீவுகள் இங்கிலாந்து அணிகளுக்கிடையே பர்மிங்காமில்நடைபெற்றமுதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டில் மேற்கிந்திய தீவுகள் அணி சிறப்பாக விளையாடி ஒரு இன்னிங்ஸ், 180 ஓட்டங்களினல் வெற்றிபெற்றுள்ளது.

இறுதி ஸ்கோர்:- மே.இ. தீவுகள்: 606, இங்கிலாந்து: 191,235 இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் இம்மாதம் 28ம் திகதி 'லாட்ஸ்' மைதானத்தில் நடைபெறவுள்ளது. [சூ]

## வாஷிங்டனில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கை ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் கண்டிக்கும் சுலோக அட்டைகளை கையில் ஏந்தியிருந்தனர்.

'ஈழத்தமிழர்' என்று இந்த விசேட அநுபந்தம் தலைப்பிட்டிருந்தது இதில் 'கண்ணீர்த் தீவு' என்றும் துணைத்தலையங்கமும் இடம்பெற்றிருந்தது.

1983-ம் ஆண்டு ஜுலைக் கலவரம் வரையிலான இலங்கைத் தமிழர்களின் நிலைபற்றி இந்தஅநுபந்தத்தில் வரலாற்று ரீதியாகத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதே நேரத்தில் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையிலேயே ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அமெரிக்க விஜயத்தை வரவேற்றும் அரசாங்கத்தைப் பாராட்டியும் கட்டுரைகள் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தது.

'வாஷிங்டன் டைம்ஸ்' என்ற வேறொரு அமெரிக்கப் பத்திரிகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவைக் கண்டித்து கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

அக்கட்டுரையை ரஸல் வெரன் ஹப் என்பவர் எழுதியிருந்தார்.

''இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க இந்தியா படைகளை அனுப்புமானல் அதனைமுறியடிக்கஅமெரிக்க ஆதரவை ஜே. ஆர்.பெற முயலுகிறார். இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் திரு. ஜோன் ரீட் அமெரிக்கா இலங்கைக்கு இராணுவ உதவி வழங்குவது அசாத்தியம்என்று கூறியுள்ளார். ஆனலும் ஜனாதிபதி ஜெயவர்த்தன வாஷிங்டனில் அமெரிக்கத் தலைவர்களின் ஆதரவைப் பெறுவதிலேயே முற்படுகின்றார்.

''இலங்கையில் தமிழர்கள் மீதான சிங்களவர்களின் அடக்குமுறை அதிகரித்துள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை தென்னுபிரிக்காவில் நடைபெறும் அரசியல் கைதிகளின் மீதான சித்திரவதைகளுடன் இலங்கை அரசியல் கைதிகள் நடாத்தப்படும் முறைகளை ஒப்பிட்டுள்ளது. இவ் ஒப்பீடு இலங்கையை உலகில் மிகமோசமாக மனித உரிமைகளை மீறும் ஒரு நாடாகக்காட்டுகின்றது'' என்று திரு. ரஸல் வொரனின் அக்கட்டுரை தெரிவிக்கின்றது.

''இலங்கைப் பிரச்னையில் அமெரிக்கத் துருப்புக்களை ஈடுபடுத்தவே இலங்கை ஜனதிபதி இங்கு வந்துள்ளார்'' என்று அக்கட்டுரைகளுக்குத் தலையங்கமிட்டுள்ளது. [கி]

## செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர் — ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமூகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள், போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.

## உப-ஜனாதிபதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிக்கப்படவுள்ளார் என்றும் கூறினர்.

தமக்கு ஒரு உப ஜனாதிபதி இல்லையென்றும் அப்பதவி ஏற்படுத்தப்பட வேண்டியிருந்தால் அதற்கு ஒரு தமிழரையே நான் நியமிப்பேன் என்றும் அவர் கூறினர். (கி)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை அருள் மிகு ஸ்ரீ செந்தில் கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் காலை 9-30 மணிக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் நடை பெற்று ஷண்முகார்ச்சனை தாரா ஹோமத்துடன் லட்சார்ச்சனை நிறைவு பெறும். நண்பகல் அன்னம் தானம் நடைபெறும்.

மாலை 4-30 மணிக்கு திருக்கல்யாணமும், திரு ஊஞ்சலும் நடை பெறும்.

## நூல்கள் அன்பளிப்பு

(கோண்டாவில்)

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையின் கொக்குவில் உபபணியக பொதுநூலகத்திற்குசுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் அமெரிக்கசென்ரர் நிறுவனத்தினல் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ் நூலகத்திற்கு இந் நூல்களைப் பெறுவதில் பெறும் அக்கறையை உப பணியக நிர்வாக உத்தியோகத்தர் திரு. இராசா தணிகாசலம் கட்டினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதிய பதிவாளர்

(சுளிபுரம்)

வலிகாமம் மேற்கு, சங்கானைக் கோவில் பற்று பகுதிக்கு பதிவாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான விண்ணப்பகாரர்களின் பரிசீலனை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. முற்பத்திரண்டு விண்ணப்பகாரர்கள் இப் பதிவாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். இம்மாத முடிவுக்குள் புதிய பதிவாளர் தெரிவு செய்யப்பட்டு விடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

## குடும்பத் தகராறு: கணவன், மனைவி தற்கொலை!

[கிளிநொச்சி]

குடும்பத்தகராறு காரணமாக கணவனும், மனைவியும் நஞ்சிடம் தஞ்சமடைந்து மரணத்தை தழுவிக் கொண்டனர்.

தர்மபுரத்தில் வசித்து வந்த கண்ணையா சுப்பையா 40வயது அவரது மனைவி லெட்சுமி 35 வயது ஆகியோரே நஞ்சிடம் தஞ்சமடைந்து மரணத்தை தழுவியோராவர்.

இம் மரணங்கள் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி முருகேசு யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிசை சேர்ந்த கான்ஸ்டபிள் என். இராசசேகரம் ஆஜர் செய்தார்.

மரணமான சுப்பையா தினமும் மதுபோதையில் வந்து மரணமான அவரது மனைவிக்கு தொல்லைகொடுத்து வந்தாரெனவும் இவர் நடத்தும் சைக்கிள் கடையில் இருந்துவரும் வருமானம் முழுவதையும் குடிக்கே செலவு செய்தார் எனவும் சம்பவதினம் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை ஏற்பட்டு முதலில் மனைவி நஞ்சை அருந்தியதாகவும் இதைப் பொறுக்காத கணவன் மிகுதி நஞ்சை அருந்தியதாகவும் இருவரும் ஸ்தலத்திலேயே மரணமானர்கள் எனவும் மரணவிசாரணையில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது.

மரணமானவர்களின் மகளான சண்முகப்பிரியா (18 வயது) க. கந்தையா ஆகியோரும் சாட்சியமளித்ததை தொடர்ந்து தற்கொலை மரணங்கள் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

## சிங்கராயர் இராணுவ முகாமில்

(கொழும்பு)

''வணபிதா சிங்கராயர் மட்டக்களப்பு சிறையிலிருந்து கொழும்பு இராணுவமுகாமுக்கு மாற்றப்பட்டுள்ளார். பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் விசேட உத்தரவின்பேரிலேயே இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.''

இத்தகவலைப் பிரதமமந்திரி [illegible] தெரிவித்தார். (இ-வெ)

## பம்பாய் வெங்காயம்

(கொழும்பு)

பம்பாய் வெங்காயத்தை ஏற்றிக்கொண்டு இருகப்பல்கள் இருநாட்களில் கொழும்பு வந்து சேருமென்று வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. எம். எஸ். அமரசிறி தெரிவித்தார்.

வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு முன்பு கொழும்பு வந்த இருகப்பல்களில் ஒரு கப்பலைக்காணவில்லை என்றும் மற்றக்கப்பல் நீரில் மூழ்கியுள்ளதாகவும் அவர் கூறினர் (வெ)

## அகில இலங்கை போட்டி

(சாவகச்சேரி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 1984 ம் ஆண்டு இளைஞர்களுக்கான போட்டிகளை அகில இலங்கை ரீதியாக நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

இளைஞர்- யுவதிகள் மத்தியில் நடத்தப்படவுள்ள போட்டிகளில், நாடகம், நடனம், நாட்டுப்பாடல்கள், கர்நாடகம் இசை, வாய்ப்பாட்டு, புதிய பாடல், சிறுகதை, கட்டுரை, கவிதை, அறிவிப்பாளர் போன்றவற்றில் போட்டிகள் நடைபெறும்.

இப் போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்புவோர் அவ்வப்பகுதி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளலாம்.

## பயங்கரவாதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரவாதிகள் அங்கிருந்து அறிக்கைகளை விடுவதற்கும் தமிழ் நாடு அரசு உதவியளிக்கிறது என்றும் கூறினர்:

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட அலன் தம்பதிகளும் இவ் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டனர். (வெ)

## பயங்கரவாத நட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பும் மக்கள் இதனல் அஞ்சிவாழ்கிறர்கள்.

''பயங்கரவாதகுற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்' தகவல்கள் கொடுத்த ஏழு பேரைப் பயங்கரவாதிகள் அண்மையில் சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

''தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதக் குழுக்களுக்குச் சேர்க்கப்படுகிறர்கள். இவர்கள் பயிற்சிக்காக தமிழ்நாட்டிற்கு அனுப்பப்படுகிறர்கள்.

''கடந்த 25ம் திகதிக்குப் பின்னர் 3 பொலிஸ் உத்தியோகத்தர்களும், 6 அரசாங்க உத்தியோகத்தர்களும், மற்றும் பொதுமக்களும் பயங்கரவாதிகளினல் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்'' என்றார். (வெ)

## உற்சவம்

(சுண்டுக்குளி)

பிரசித்தி பெற்ற பாஸையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. யாழ்- ஆயர் அதி. வந். பீ தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டு பூசையும், மாலை தேர்ப் பவனியும் நடைபெற்றது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org